112895

# தில்லைச் சிற்றம்பலவன் கோயில் வரலாறு


Q23:38.2114
N56
DIGIT
112895

142
142/2-56
10 APR 1956

சிவமயம்

# தில்லைச் சிற்றம்பலவன் கோயில்

## வரலாறு



செம்பு] நடராஜப் பெருமான் ஆடி அருளியவாறு

ஆக்கியவர்:

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

N56
112895

பாரி நிலையம்

சென்னை-1.

# தில்லைச் சிற்றம்பலவன் கோயில்

## சிதம்பரம்

ஆக்கியவர் :

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

பாரி நிலையம்

59, பிராட்வே

சென்னை—1.

முதற் பதிப்பு—1956

ஆசிரியரின் இதர நூல்கள்:

The Great Temple at Tanjore
Palni—The Sacred Hill of Muruga
The Five Tamil Idylls of Pattuppattu
A Plan for Tiruchendur
Tiruchendur—
  The Sea-shore Temple of Subrahmanyam
சோழர் கோயிற் பணிகள்
தஞ்சைத் திருக்கோயில்கள்
பழநித் தல வரலாறு
The University's Environs
  and Chidambaram

O23;32.2114.C
N56

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
  சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
  யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
  திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
  யான்இதற் கிலன்ஓர் கைம்மாறே

—மாணிக்கவாசகர்

TAMIL NADU ARCHIVES LIBRARY
112895

விலை அணா 12

[பதிப்புரிமை ஆசிரியருக்கே]

அச்சிட்டோர்:—கமர்ஷியல் பிரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ்,
40, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

# நன்றியுரை


உலகம் உய்தற்பொருட்டு, இறைவன் தமது ஐந்தொழிலை ஆனந்தக் கூத்தாக ஆடிக் காட்டியருளிய தலம் சிதம்பரம் ஆகும். இதுவே தில்லைச் சிற்றம்பலமுமாம். இது சைவ உலகத்தின் இருதய கமலமுமாகு மென்பர் அறிஞர். இச் சிறு நூல் இப் பெருங்கோயிலின் வரலாற்றை மிகச் சுருக்கமாகக் கூறுவது. இதனை ஆக்கத் தூண்டிய 'எல்லாம் செயல் கூடும்' அம்பலவாணனுக்கு முதற்கண் எனது ஆர்வங் கலந்த வணக்கம்.

இந் நூல், திருக்கோயில் கும்பாபிஷேக சமயத்தில், 'கலை மகள்' மலர்கள் இரண்டினில் வெளிவந்துள்ளது; இப்போது சிறிது விரிவாக்கியதாகும். அதற்காக அதன் உரிமையாளர்களுக்கும், இவ் வெளியீட்டிற்கிசைந்துதவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இந் நூலைப் பல்லாற்றானும் அழகுபடுத்தும் கோயிற் சிற்பங்களை வெளியிடுதற்குதவிய ஆனந்த விகடன் ஆசிரியராகிய மெய்யன்பர் உயர்திரு எஸ். எஸ். வாசன் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
மன்மத ஆண்டு,
மாசித்திங்கள் முதல் நாள்

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை




"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே"

—திருஞான சம்பந்தர்

* அன்புரிமை ; எல். கணேச சர்மா.]

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்
துணை வேந்தர்
உயர்திரு. திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை
எம். ஏ., பி. எல்., எம். எல். ஸி., அவர்களுக்கு
எனது அன்பின் கையுறையாக
இந் நூலை
உரிமையாக்குகிறேன்



# தில்லைச் சிற்றம்பலவன் கோயில்

## சிதம்பரம்

தல அமைப்பு

தில்லைச் சிற்றம்பலவன் அருள்தலமாகிய சிதம்பரம் செந்தமிழ்த் தென்னாட்டின் பழம்பதியாகும். தமிழ் மக்களின் சமய வாழ்க்கையில் முதலிடம் பெற்றதுமாகும். சென்னைக்குத் தெற்கே தென்னிந்திய இருப்புபாதை நேர்வழியே 151 மைலி லுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சிதம்பரம் தாலுக்காவின் தலைமைப் பட்டணமாகும். 1105 ச. ஏக்கர் விஸ்தீரணமும், 34,575 ஜனத் தொகையுங் கொண்டது. நகராட்சி மன்றம் 1871 இல் தொடங்கி நகர வளர்ச்சிக்குப் பல்லாற்றனும் பணி செய்து வந்துள்ளது.

இத்தலத்தின் கிழக்கே திருவேட்களம், அண்ணாமலை நகரும், தெற்கே, திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, கொள்ளிடப் பேராறும், மேற்கே நாகசேரியும், வடக்கே வெள்ளாறும் எல்லையாக உள்ளன. ஊருக்கும், ரயில்வே நிலையத்திற்கும் நடுவே பாலமான் எனும் சிற்றாறு நகருக்கு அணிசெய்கின்றது.

---

* சோழர் சிற்பச் சிறப்பு: கோயில் புரைத் தோரணம்: அன்புரிமை ஆனந்த விகடன்.

இந்நகர் முன்னாளில் இருபத்துநான்கு சிற்றூர்களைக் கொண்ட ஒரு தனியூராக (Corporation) விளங்கியதெனக் கல்வெட்டுக் குறிப்புக்களால் அறிகிறோம்.*

## தலப் பெயர்கள்

இத்தலம் தில்லைவனமாக யிருந்தமையின் தில்லை என்றும், புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் தவங்கிடந்து இறைவன் திருநடனத்தைக் கண்டதன் காரணமாகப் புலியூர், பெரும்பற்றப்புலியூர் என்றும், தில்லைக்கூத்தன் ஆனந்த நடனமிடுகின்ற தலம், உலக உதயமும், ஆன்மாக்களின் இதயமுமாகின்ற தன்மையால், குகை, பொது, சிற்றம்பலம், புண்டரிகபுரம், தனியூர் என்றும், இறைவனின் பஞ்சபூதத் தன்மைகளில், ஆகாசத்தின் வடிவாக இங்கு அமைதலின், ஞான ஆகாசம், என்றும், ஞானமாகிய சித் அம்பலமாகிய பொது நடுவில்—(அம்பலத்தில்) ஆடுகின்ற தன்மையால், சித்+அம்பலம்—சிதம்பரம் என்றும், இவ்வம்பலம் பொன்னால் முகடு வேயப்பட்டிருக்கும் தன்மையால் பொன்னம்பலம் என்றும், திருக்கூத்தின் தன்மைகளை விளக்கியும், பொன்னம்பலத்தின் பல பகுதிகள் விளக்குவன யாவை எனக் கூறும் பலப்பல வடமொழிப் பெயர்களையும் தாங்கியதாகும்.

## தலக் கோயில்கள்

நகரின் எங்கும் சைவ மணங் கமழும் திருக்கோயில்கள் எண்ணில. பிள்ளையார் கோயில் கொண்டருளும் வேடன் பிள்ளையார், செங்கழுநீர்ப் பிள்ளையார், தேரடிப் பிள்ளையார், கூத்தாடும் பிள்ளையார், நரமுகப் பிள்ளையார், முக்குறுணிப் பிள்ளையார், க்ஷேத்திரபாலப் பிள்ளையார் கோயில்கள் அனந்தம்—ஊரின் காப்பாகிய காளியம்மன், மாரியம்மன் வடபாலிருக்கும் தில்லைக் காளியின் பெருங் கோயில்களும், திருப்புலீச்சரமாகிய இளமையாக்கினார் கோயிலும், அனந்தீச்சரம், கமலீசுவரன், வீரபத்திரர் கோயில்கள் மற்றும் பல உள.

* சிற்றூர்களிற் சில: கொற்றவன்குடி, தில்லைநாயக நல்லூர், திருவேட்களம் (ஜனநாத நல்லூர்), சிவபுரி (திருநெல்வாயில்), சிங்காரத் தோப்பு (திருக்கழாஞ்சேரி), கோயிற்பூண்டி, உலக முழுதுடையான் சதுர்வேதிமங்கலம் முதலியன.



## தலத் தீர்த்தங்கள்


தலத் தீர்த்தங்கள் பன்னிரண்டாம். சிவகங்கையும் பரமானந்த கூபமும் திருக்கோயிலினுள்ளும், வியாக்ரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி, புலிமடு, சிவப்பிரியைத் தீர்த்தம், திருப்பாற்கடல், ஓமகுளம் ஆதி புராணச் சிறப்புப் பெற்றவை. ஞானப் பிரகாசர் குளம், ஆயிகுளம், சமீப காலத் தவையாகும். நகருக்கு சுமார் ஐந்து மைல் தொலைவிலுள்ள முன்னீர்க்கடலும், இறைவன் திருவிழாக் காலங்களில் சிறப்புறுகின்றமையால், அஃதொன்றும் தீர்த்தங்களுடன் எண்ணுதல் அமையும்.

## தல நூல்கள்

இத்தலத்தின் பெருமைகளை திருமூலர் திருமந்திரமும், சைவ சமயாசாரியர் அப்பர், சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களும், மணிவாசகரின் திருவாசகம்—திருக்கோவையாரும், அருணகிரியார் திருப்புகழும், பதினொன்றும் திருமுறை ஆசிரியர் அருள் நூல்களும், உமாபதியின் கோயிற்புராணம், சைவ சாத்திரங்களும், குமரகுருபரர் சிதம்பரம் மும்மணிக் கோவை, மணி மாலைகளும், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா, ஆறுமுக நாவலர் சிதம்பரம் மகான்மியம், சிதம்பரப் புராணம், புலியூர்ப் புராணம்; தில்லைவன மான்மியம், சிதம்பர விலாசம், சிதம்பர ரகசியம், தில்லைக் கலம்பகம், தில்லையுலா, மற்றும் எண்ணற்ற வடமொழிப் புராணங்கள், ரகசியங்கள், புஜங்காஷ்டகங்கள், கவசங்கள், தோத்திரங்கள், சபாநாயக நாடகங்களும் மற்றும் நூல்களும் விளக்குவன.

## கல்வி நிலையங்கள்

இவ்வூரில் ஏழு உயர்நிலைப் பள்ளிகளும், நகராட்சி மன்றத்தார் நடத்தும் 23 ஆரம்பப் பள்ளிகளும், எட்டு இலவச வாசகசாலைகளும், இரண்டு தேவாரத் திருமுறைப் பள்ளிகளும், சமய போதனைக்கான சொக்கலிங்கையா மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையும், இரண்டு வேத பாடசாலைகளும் உள்ளன. மற்றும், திருப்பனந்தாள் காசிமடம், அதிபர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தினமும்




அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

காலையிலும் மாலையிலும், தேவாரத் திருவாசகப் பதிகங்களை திருக்கோயிலின் கோபுர வாயிலினின்றும் ஒலிப்பரப்ப ஏற்பாடு செய்துள்ளார்கள். இதனால் மக்கள் மனத் தூய்மை பெறுகிறார்கள்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தில்லையம்பதியிலுள்ள கல்வி நிலையங்களில், தென்னாட்டிற்கே அணியாகும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிறப்புடைத்தாகும். நிறுவியவர் பெருங்கொடை வள்ளல் செட்டி நாட்டரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆவர். இருபத்தாறு ஆண்டுகட்கு முன்னர் 1929-ல் நிறுவப் பெற்று, தமிழ்க்கு நிலைக்களமாகவும், வடமொழி, ஆங்கிலம், விஞ்ஞானம், பொறியியல், இசை, கைத்தொழில், போதனாமுறை, வேளாண்மை, அருங்கலைகள் யாவும் போற்றும் பல்கலைக் கழகமாகவும், இரண்டாயிரத்திற்கு மேலான மாணவர்களையும் ஒருங்கே தம்முட் கொண்டு அவர்களுக்கான பல விடுதிகளையும், கல்வி மாடங்களையும் தாங்கி அரும்பணி செய்து வருகிறது. அதன் வளர்ச்சியை நாளும் கருதி பெரும் ஊக்கத்துடனும், சலியா உழைப்புடனும் இணைவேந்தர் அண்ணாமலைப் பெருவள்ளலின் திருமகனார் டாக்டர் ராஜா சர். முத்தய்யா வள்ளல் அவர்களும், துணைவேந்தர் உயர்திரு டி. எம். நாராயணசாமிப்பிள்ளையவர்களும் பரிபாலித்து வருகின்றனர்.

பல்கலைக் கழகம், தில்லையின் கிழக்கே, அருச்சுனன் தவங்கிடக்க, இறைவன் வேடனாகி வந்து பாசுபதாஸ்திரம் கொடுத்தருளிய திருவேட்களத்திற்கும் [37-ஆம் பக்கம் படம் பார்க்க] சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் எட்டினை அருளிய உமாபதி சிவத்தின் அருள்தலமாகிய கொற்றவன் குடிக்கும் மத்தியில் அமைந்துள்ளது. இன்னும் திருவேட்களம் சைவ சமயாசாரியர் ஞான சம்பந்தரும் அப்பரும் உறைந்து திருப்பதிகங்கள் பாடியருளிய சிறப்புடையதுமாகும். இவ்வருள் தாங்கிய இடங்களிலே இத்துணைச் சிறப்புடன் விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வருங்காலச் சிறப்பு அளவிடற்பாலதன்று. செந்தமிழ் நாட்டின் தனிச் சிறப்பென்றே சொல்லுதல் அமையும்.




அன்புரிமை: ஆனந்தவிகடன்]

தில்லைப் பேரம்பலமும் சிவகங்கையும்

# தில்லைச் சிற்றம்பலவன் கோவில்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

—சேக்கிழார்.

திருச்சிற்றம்பல முடையான் கோயில் தென் தமிழ் நாட்டின் நடு நாயகமாகும். நூல் வல்லுநர், உலகத்தை விராட் புருடன் வடிவாகக் கருதி, சிவதலங்களைக் கொண்டு அதனை விளக்குவார்கள். திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; சிதம்பரம் இருதயம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மத்தியம். சிதம்பரம் இருதய மாதலின், இறைவனது இயக்கமாகின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தில் அமைந்திருப்பது வியப்பன்றே. இந்தத் தாண்டவம் உலகம் தோன்றிய கால முதற்கொண்டு நடைபெறுவது. ஒரு காலத்து தேவர்களது வேண்டு கோளுக்கிணங்கி இறைவன் தாருகா வனத்து ரிஷிகளது செருக்கை அடக்க ஆடினார். அப்போது அவர் பிக்ஷாடனர் உருத்தாங்கி, விஷ்ணு மோகினியாகப் பின்தொடரவும், பூதகணங்கள் பிக்ஷாபாத்திரந் தாங்கியும் செல்லலானார். (படம் பார்க்க) வனத்தை அடையவும், அவர்களது வனப்பைக் கண்ட ரிஷிகள் மோகினியைத் தொடரவும், ரிஷிபத்தினிகள் பிக்ஷாடனரைத் தொடரவுமாயினர். சிறிது நேரத்தில், ரிஷிகள் வந்தவர்களின் உண்மையை உணர்ந்து வெட்கினர். பின்னர் அவர்களை எவ்விதம் கொல்லுவதென்பதைக் கருதி ஒரு ஹோமத்தினின்றெழுந்த ஒரு புலியைச் சிவனார்மீது ஏவினர். பாய்ந்த புலியின் தோலைச் சிவனார் உரித்துத் தன் இடையில் கட்டிக் கொண்டார். பின்னர் அவர்கள் ஏவிய கொடிய பாம்பைத் தன் கழுத்தின்மீது மாலையாக அணிந்தார். பின் நடனமாடத் தொடங்கினார். அதுகண்ட ரிஷிகள் கோபமெழுந்து முயலகன் என்ற அபஸ்மார ராக்ஷசனை அவர் மீது ஏவினர். சிவன் அவனைக் காலின்கீழ் மிதித்து அடக்கி



பிக்ஷாடனர்

அன்புரிமை: ஆனந்த விகடன்] வடக்கு கோபுரச் சிற்பம் [16-வது நூற்றாண்டு



நாதாந்த நடனம் ஆடினுர் என்பது. ரிஷிகள் தங்களது வலி யிழந்து, செருக்கடங்கி இறைவனது மன்னிப்பைப் பெற்றுரென் பது வரலாறு.

மீண்டும் மறுதடவை அடியார் பொருட்டு இதனை இவ் வையகத்தில் தில்லையில் ஆடினுர். இங்கே ஆடிக் காட்டியது வியாக்கிரபாதருக்கும் பதஞ்சலிக்குமாம். இதனை உமாபது சிவாசாரியார் கோயிற் புராணம் திருக்கூத்து தரிசனம் என்ற பகுதியிலும், குமரகுருபர சுவாமிகள் சிதம்பரம் மும்மணிக் கோவையிலும், மனவாசகங்கடந்தார் உண்மை விளக்கம் (31-49) பாக்களிலும், திருமூலர் திருமந்திரத்திலும், பெரிய புராணம், மற்றவைகளிலும் விளக்குவார்கள்.

## தல வரலாறு

வியாக்கிரபாதர் ஒரு முனிவரின் புதல்வர்; காசிவாசி. தில்லையின் பெருமையைத் தம் தந்தையாரிடம் கேட்டு இறை வனை இங்கு வழிபட வந்தவர். தில்லை வனத்தின் நடுவே, ஓர் ஆலமர நிழலில், ஒரு சுயம்புலிங்க வடிவைக் கண்டார். அதுவே இப்போது திருமூலட்டானேசுவரர் என்னும் சந்நிதி யாகும். அவரை ஆர்வங்கொண்டு வழிபட்டார். வழிபாட்டுக் குரிய மலர்களின் தேனை வண்டுகள் சுவைக்கு முன்னரே அவைகளை எடுத்துப் பூசிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனைப் பெருமானிடம் விண்ணப்பித்தார். பொழுது புலராமுன் தாமே மரங்களின் மேல் வழுக்காமல் ஏறிப் பூப் பறிப்பதற்குப் புலிக் கால், புலிக் கைகளையும், இரவுக் காலமாயினும் பூக்களைத் தெரிந்து பறிப்பதற்குப் புலிக் கண் களையும் பெற்றுர். அதனுலேயே அவர் வியாக்கிர பாதர் எனப் பெயர் பெற்று இறைவன் வழிபாட்டில் மகிழ்ந்திருந்தார். அப் போது, பதஞ்சலி என்ற மற்றெரு முனிவரும் அங்கு வந்தார். அவர் ஆதிசேடன் அவதாரம். விஷ்ணுவின் பாயலாகக் கிடக் கையில், விஷ்ணு இறைவனின் ஆனந்த தாண்டவ அதிசயத் தைத் தான் தாருகா வனத்தில் கண்டு அனுபவித்ததைப் பல முறையும் சொல்லக்கேட்டு மகிழ்ந்தார். தாமும் அதனைக் கண்ணுறப் பெரிதும் விழைந்தார். தவஞ் செய்தார். இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வள்ளலன்றே? தமது



வியாக்கிரபாதர்

கிழக்கு கோபுரச் சிற்பம்

அன்புரிமை: ஆனந்த விகடன்] [12-வது நூற்ருண்டு



தாண்டவத்தைத் தில்லையில் காணலாமென ஆணை தந்து மறைந்தார். ஆதிசேடனும், பாதி மானிட வடிவமாகவும், பாதி பாம்பின் வடிவமாகவும் தோற்றமெடுத்துத் தில்லையை அடைந்து வியாக்கிரபாதரிடம் நட்புக்கொண்டு, திருமூலட்டானேசுவரரைத் தொழுது தில்லையின் மேல்பால் நாகசேரி என்ற தீர்த்தத்தை உண்டாக்கி, அதன் கரையில் ஒரு சிவலிங்கம் தாபித்து இறைவன் தாண்டவத்தை எதிர்நோக்கி வருவாரானர்.

இத்தருவாயில், மற்ருெரு தல வரலாறு குறுக்கிடுகின்றது. திருமூலட்டானேசுவரமாகிய தில்லையில், அம்பிகையாகிய காளியும் இடம் பெற்றிருந்தாள். தில்லையில் இறைவன் நிருத்த சபையில் தமது தாண்டவத்தை நிகழ்த்த வரவே காளி அதனை மறுத்து, தன்னுடன் போட்டிக்கு அழைக்க, இறைவன் தமது ஊர்த்துவ தாண்டவத்தால் அவளது செருக்கை அடக்கி, "தில்லையின் வடபால் அமர்க" என, 'தில்லைக் காளி என அமர்ந்தனள். இதுபோதும், இன்னும், தில்லைக் காளியின்



பதஞ்சலி

கிழக்குக் கோபுரச் சிற்பம்

அன்புரிமை: ஆனந்த விகடன்] [12-வது நூற்-

கோயில் சிறப்புப்பெற்ற தலமாக விளங்குகிறது. இறைவனது இந்த ஊர்த்துவ தாண்டவத்தைப் பதஞ்சலியும் வியாக்கிர பாதரும் தரிசித்து இறைவன் அருள் பெற்றனர். அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி இறைவன் இங்கு தில்லை நடராஜனாக என்றும் காட்சியருளுவாராயினார். இது முதல் தில்லை நடராஜத் தத்துவமும் இங்கு இடம் பெறுவதாயிற்று.

கதையானாலும், உண்மையானாலும் இவை அதிசயம் அல்ல. இறைவன் அடியாருக்கு எளியன். மதுரையில் அடியாருக்காக அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்துள்ளான். இன்றும் தில்லையில் பொன்னம்பலவன் திருக்கூத்துப் புரிந்த வண்ணம் உள்ளான். பின்னும் இந்தக் கூத்தினைப் பாண்டியனுக்காக மதுரையிலும், காரைக்காலம்மையாருக்காகத் திருவாலங்காட்டிலும் நிகழ்த்தியருளினான் என்பது நூல்களின் துணிபு. அவன் திருக்கூத்தினால் உலகம் இயங்குகின்றது. இதனை மாணிக்கவாசகர் சிவனது காருணியத்தை விளக்குகின்ற முறையில், திருச்சாழல் பதிகத்தில் விளக்குகின்றார். இறைவனது திருத்தாண்டவம் நிற்கும் காலத்து, "உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ" என்பது காண்க. இறைவன் இங்கு ஆடியது நாதாந்த நடனம் என்றும், இது அவன் ஆடிய எழுவகை நடனங்களில் ஒன்று என்றும் கூறுவர்.

## சரித்திரத் தொடர்புகள்

மிகப் பழமையான தல வரலாறு இவ்வாறாக, சரித்திர கால விவரங்களை ஆராய்வோம். இவைகளே இக்கோயிலின் வளர்ச்சிக்கு ஒரு காலக் கண்ணாடியாகவும் தோன்றும். அவற்றுள் முதல் முதலாகக் காணப்படும் வரலாறு, பல்லவ அரசன் சிம்ம வர்மன் II (கி. பி. 550-575) தில்லைக் கூத்தனைத் தரிசிக்க வந்து, சிவகங்கைக் குளத்தில் நீராடி, தனது வெம்மை நோய் நீங்கி, தன் மேனி பொன் வண்ணம் பெற்றதாம். இக் காரணம் பற்றி ஹிரண்யவர்மன் என்று அழைக்கப் பெற்றான் என்றும், ஆடவல்லானின் அருளை நினைந்து இந்தச் சபையைப் புதுப்பித்தும் இதனைச் சுற்றிப் பல மண்டபங்களையும் கட்டிப் பிராகாரங்களையும் வகுத்தான் என்றும் தெரிய வருகிறது.



ஏழாம் நூற்றாண்டிற்கு வருவோமாயின் அதுதான் சமயாசாரியர் அப்பர், சம்பந்தரது காலம். அவ்விருவர்களாலும் தமிழகம் சமண சமயத்தினின்று மீட்கப்பட்டது. பல்லவ மகேந்திர வர்மனும், கூன் பாண்டியனான அரிகேசரியும் முறையே சோழ பாண்டிய மண்டலங்களில் சைவத்தை நிலை நாட்டினார்கள்.

அப்பர் சுவாமிகள் தில்லைச் சிற்றம்பலத்து நட்டம் பயிலும் நாதனைக் கண்டு பாடிய பாக்கள் உள்ளத்தை அள்ளுகின்றன ; ஊனை உருக்குகின்றன. அவர், "என்று வந்தாய்" என்னும் எம்பெருமானின் திருக்குறிப்பைக் கண்டவர். அவரே சிதம்பர நாதனின் 'குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும், இனித்த முடையவெடுத்த பொற் பாதமும்' காணப் பெற்றவர். அவரும் காழிப் பிள்ளையாராகிய சம்பந்தரும் அம்பலத்தே ஆடுகின்ற தனிக்கூத்தன் பெருங்கூத்தைக்கண்டு எல்லையில்லா இன்பம் அடைந்தபோது சைவம் உய்ந்தது. உலகம் சைவ மணம் கமழ்ந்தது.

பிறகு, ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முதலிலும் வாழ்ந்தருளிய சுந்தரர் தில்லையை அணுகுகின்றார். திருவாரூரிலிருந்து திருத்தொண்டத் தொகையைப் பாடித் தில்லைவாழந்தணர் தம் அடியாராகத் திகழ்கிறார். இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்கிறார். இம் மூவர் காலத்தும் சைவப் பேரரசு ஒரு தனிப் பெருஞ் சிறப்பை எய்தியிருந்தமையின் தில்லைத் தலமும், தனிப்பெருங் கருணையின் திருக்கோயிலும் மலிவளம் பெற்று, அரசப் பெரு வாழ்வு பெற்றிருந்தது.

இவர்களது காலத்துக்குப் பின்னரே இக் கோயிலில் கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியும் இடம்பெறலாயிற்று. இதனை திருமங்கையாழ்வாரும் குலசேகர ஆழ்வாருமாகிய இருவரும் தம் பாசுரங்களில், "செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்து தில்லைத் திருச்சித்திர கூடத்தைச் சேர்மின்" என்கிறார்கள். இவர்கள் காலத்துக் கோவிந்தராஜனின் வழிபாடுகள் தில்லை மூவாயிரவரான தீட்சிதர்களிடமே இருந்து வந்தது எனவும், சில நூற்

ருண்டிற்குப் பிறகுதான் தனிப்பட்ட வழிபாடுகள் ஏற்பட்டன எனவும் தெரிகிறது.

இவர்களுடனே, எட்டாம் நூற்றுண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றுண்டின் முதற் பகுதியிலும் நிலவிய மணி வாசகப் பெருமானது தொடர்பும் நினைப்புற வேண்டியது ஒன்று. மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தவர். ஆலவாய்ச் சொக்க ரால் ஆட்கொள்ளப் பெற்றவர். உலகுடைய ஒரு முதலைச் செறி பொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி, மறைய வரும் வானவரும் வணங்கிடக் கண்டார். அன்றே தம் ஆவியினையும் உடலையும் அவரதாக ஈந்தார். அவர் காலத்துத் தில்லையில் நடந்த அற்புதங்கள் பல. பௌத்த சமய வாதிகளை வென்று, ஊமைப் பெண்ணைப் பேச வைத்து, சைவத்தை இன்னும் வேரூன்றச் செய்த பெருமை அவருடையதாகும். இன்னும், இறைவனே வேதியராக வந்து அவரது திருவாச கத்தை எழுதியதும் அல்லாமல், 'கோவை பாடுக' என்றதும், அது பாடியபின் செப்பேட்டில் பொதிந்து வைத்த அதிசயமும் அக்காலச் சைவ சமயத்தின் ஓங்கிய செல்வாக்கின் நிலையைக் குறிப்பனவாகும்.

மாணிக்கவாசகர் காலத்தில் விளங்கிய ஆதிசங்கரர் (கி. பி. 788–820) இங்கே வந்து ஸ்படிக லிங்கமாகிய அழகிய சிற்றம்பலமுடையாரைக் கொடுத்து, சிதம்பரச் சக்கரம் ஒன்றையும் இங்கே தாபித்தார் எனவும் கூறுவர்.

இச்சமயமே, பிற்காலச் சோழர் பேரரசும் தில்லைப் பெருங் கோயிலும் உச்ச நிலை அடைந்திருந்த காலமாகும். இந்தச் சோழர்கள் செங்கோலோச்சியது ஒன்பது முதல் பதின்மூன்றும் நூற்றுண்டு வரையாகும். சோழன் விஜயாலயன் மரபினர் சைவப் பற்றுள்ளவர்கள். விஜயாலயன் முதல் (கி. பி. 846-880) இறுதிச் சோழனை மூன்றும் இராஜேந்திரன் (கி. பி. 1246–79) வரை, ஒவ்வொருவரும் தில்லை நடராஜனுக்குத் தொண்டடிமை யாகக் கருதி அவர் கோயிலுக்குப் பொற்றகடு வேய்ந்தும், திருச் சுற்று மாளிகை எடுப்பித்தும், திருவீதிகளைக் கற்களால் பரப்பி யும், பலபல மண்டபங்களை வனைந்தும் திருப்பணி செய்துள்ளனர். அவரவர்கள் செய்துள்ள பணிகளை இங்கே காணும் இரண்டு



கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றனவாயினும், காலப் போக்கில் அரசர்கள் கோயிலைப் புதுப்பிக்கும் போது கல் வெட்டுக்கள் பல இடங்களில் திரிந்தும் சிதைந்தும் மறைந்தும் போயுள்ளன. ஆதலின் இதுவரை கண்ட சோழர் காலக் கல்வெட்டுக்களில் சிதைந்த பல, இராஜராஜன் I, இராஜேந்திரன் I, இராஜேந்தி ரன் II, இராஜமகேந்திரன் என்பவர்களுடையனவாகும்.

இவர்களுக்கு முந்தியனவான ஐந்தை ஆராய்ச்சியாளர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், 1940-இல் வெளியிட்டுள் ளார்கள். இவைகளுள், தில்லை அனந்தீசுவரன் கோயில் கல் வெட்டுக்கள் நான்காகும்; விஜயாலயன், பராந்தகனது காலத் தவை; கோயிலுக்கு நுந்தா விளக்குகள், நிலதானங்களைப் பற்றியவை. மற்றொன்று, மூன்றுவது பிராகாரமாகிய ராஜாக்கள் தம்பிரான் திருவீதியில், நூற்றுக்கால் மண்டபத்துக்கு அணித் தாகக் காணப்படுவது; விஜயாலயன் மகனை ஆதித்தன் (கி. பி. 870–907), திருமூலட்டானப் பெருமானடிகளுக்கு நுந்தாவிளக்குத் தானத்தைப் பற்றியது. இதுவே, தில்லைக் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள் 270-இல் காலக் கிரமத்தில் முந்தியதாகும். கல்வெட்டுக் குறிப்பு இவ்வாறுக, விஜயாலயனுக்குப் பின்னேனை ஆதித்தனும் பராந்தகனும் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்த விவரம் பல நூல்களால் தெரிய வருகின்றது.: நம்பியாண்டார் நம்பியாரது திருத்தொண் டர் திருவந்தாதி ஆதித்தன், 'அம்பலத்து மணிமுகட்டிற் பசும்பொன்றுற் பயில் பிழம்பா மிசையணிந்ததை அறைகின் றது. அதனுல், ஆதித்தன் கொங்கு தேசத்தை வென்று கொணர்ந்த பொன்னுல் அம்பலத்தைப் பொன் வேய்ந்தான் என்றும் காணக்கிடக்கின்றது. ஆதித்தன் மகனை முதற் பராந்தகன் சிறந்த சிவபக்தன். இவனை, "சிவனது பாத தாமரையில் உறையும் வண்டு" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இவனும் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்ததாக லேடன் (Leyden) செப்பேடுகள், விக் கிரமசோழன் உலா, கண்டரா[illegible] திருவிசைப்பாச் செய்யுட்கள் ஆகியவை கூறு[illegible]—இவ[illegible]ன்வந்த முதல் இராஜராஜன். (கி. பி. 985–1013) தன் முன்னேர்கள் வழிபட்ட ஆடவல்லானுக்கு அடி[illegible]யாயினன். தலைநகராகிய தஞ்சா



O.8 3:38.9114
N56
112895

ஊரில் பெருவுடையாருக்கு நிகர்அற்ற ஒரு தட்சிண மேருவை எழுப்பினான். தன் அளவற்ற பக்திக்கும், சோழரது புகழுக்கும்* எல்லையாக அதனைச் சிறப்பித்தான். அவனை ஆட்கொண்ட தில்லை ஆடவல்லானை இங்கே தனக்கே ஆக்கிக்கொண்டான். கூத்தப் பெருமானிடத்துள்ள அன்புப் பெருக்கினால், இவன் காலத்திய நிலமளக்கும் கோலுக்கு, "சிற்றம்பலக் கோல்" என்றும், கோயில் மரக்காலுக்கு "ஆடல் வல்லான்" என்றும் பெயரிட்டான். தில்லையிலும் திருவாரூரிலும் இறை முன்னர் விண்ணப்பஞ் செய்து வந்த தேவாரப் பாக்களில் உள்ளத்தை ஈடுபடுத்தித் தன் உணர்வை இழந்தான். அக்காலத்து மறைந்து போயிருந்த அவை யனைத்தையும் மீண்டும் உலகினுக்கு அளிக்க விரும்பி ஏங்கினான். அத்தருணம் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருக்கூத்தினையும், நம்பியாண்டார் நம்பியின் புகழையும் கேட்டு, அவர் மூலம், தில்லையில் பொதிந்திருந்த தேவாரப் பாக்களைத் தெரிந்தெடுத்து, நம்பியைக் கொண்டு அவைகளை ஏழு திருமுறைகளாக வகுத்தான். ஆதலின் இராஜராஜன் திருமுறை கண்ட சோழன் எனவும், ராஜராஜ அபய குலசேகரன் எனவும் பெயர்பெற்றான். தில்லை மூவாயிரவர் அவனுக்குச் 'சிவபாதசேகரன்' எனப் பட்டம் சூட்டினர். திருமுறை கண்ட நிகழ்ச்சியை, நடராஜப் பெருமான் தில்லைத் தாண்டவம் செய்த ஒரு திருச்செயலுக்கு அடுத்தபடியாக வைத்துச் சைவ உலகம் கொண்டாடியது.

இராஜராஜனின் மகன் இராஜேந்திரன் 1 (கி. பி. 1012–1044) காலத்தில் சோழரது ஆதிக்கம் உச்ச நிலையை யடைந்தது. ஆனால் அவர்களது திருப்பணிகளைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் யாவும், சில சிதைந்தவை போக, முழுதும் காணப்படவில்லை. அதன் காரணம்: முதற் குலோத்துங்கன், தில்லைக் கோயிலைப் புதுப்பித்தான். அவனும், அவன் பின்னோரும் செய்த திருப்பணிகளின்போது, இந்தக் கல்வெட்டுக்கள் எவ்வாறோ மறைந்து போயிருக்கவேண்டும்.

வீர ராஜேந்திரன் (கி. பி. 1063–69) தில்லையில் பார்வதி நாயகனுக்குத் திரைலோக்கிய சாரம் என்ற மாணிக்கத்தைக் காணிக்கையாக்கினான் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டொன்று குறிக்கின்றது.

* தஞ்சை இராச ராசேச்சரம்.



இனி, முதற் குலோத்துங்கனுடைய (கி. பி. 1070–1120) வரலாறும் அவன் பின்னோர்களான சோழர்களுடைய வரலாறும் தில்லைக் கோயிலின் வரலாறு என்றே சொல்லும்படியாக உள்ளன. குலோத்துங்கனது ஐம்பதாண்டு ஆட்சியில், தில்லைப் பெருமான் கோயில், அவனாலும், அவனுடைய உறவினர், அவனுடைய சிற்றரசர்களாலும் பல வளங்களை எய்தியது. அவனது புகழினை,

"பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருநைக் கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழ்த்தினவே"

எனக் கலிங்கத்துப் பரணி போற்றுகின்றது. தில்லைப் பெரும்பற்றப்புலியூரில் குலோத்துங்கனுக்கு ஒரு மாளிகை இருந்தது எனக் காஞ்சிக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. அவன் காலத்துக் கண்டன் மாதவன், சொன்னவாறறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு கோயிலும், புராணத்தைச் சொல்லுவதற்கான ஒரு மண்டபமும் இங்கு அமைத்தான் என நீடூர்க் கல்வெட்டுக் கூறும். இவைகளை இப்போது அறிவதற்கில்லை. கனகசபை, கோவிந்தராஜர் சந்நிதிகளைச் சுற்றியுள்ள இரண்டாம் பிராகாரத்து வட சுவரில் வெளியேயுள்ள நீண்டதொரு கல்வெட்டு முதற் குலோத்துங்கனும், அவன் தேவி சோழகுலவல்லி, தங்கை குந்தவை முதலியோரும் செய்வித்த திருப்பணிகளை விளக்கும்.

மற்றும், இவன் காலத்திலும், இவன் மகன் விக்கிரமன் (கி. பி. 1118–1136) காலத்திலும் பல திருப்பணிகள் தில்லையிலும் திருவதிகையிலும் ஆயின. இவைகளைத் திருத்தமுற ஆக்கித் தந்த பெருமை, அவர்களது சிற்றரசனான நரலோக வீரனதாகும். அது சிதம்பரத்தில் காணும் ஒரு பெரிய கல்வெட்டில், முப்பத்தொரு வடமொழிப் பாக்களிலும், தமிழில் முப்பத்தேழு வெண்பாக்களிலும் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. இவற்றில் இவன் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தது, கொடுங்கை பொன் வேய்ந்தது, பேரம்பலம் செம்பு வேய்ந்தது, பொற் பரிகலம் அமைத்தது, பொற் படிக்கம் அமைத்தது, பொன் எக்காளம்

அமைத்தது, கர்ப்பூர தீபம் அமைத்தது, பொன்னம்பலத்தைச் சுற்றிலும் பொன் விளக்கு அமைத்தது, பாலமுதம் அளிக்க நிபந்தம் வைத்தது, ஆயிரம் படி நெய் அபிஷேகம் செய்தது, திருப்பதிக மண்டபம் கட்டுவித்தது, நூற்றுக்கால் மண்டபம் அமைத்தது, சுற்றுமாளிகை அமைத்தது, தீர்த்தம் திருப்பணி செய்தது, வீதியில் விளக்கு மண்டபம் அமைத்தது, அம்பிகையின் கோயிலும் அதன் திருச்சுற்றும் அமைத்தது, அம்மை திருமஞ்சனத்துக்கு நிபந்தம், அம்மைக்குப் பீதாம்பரம் சாத்த ஏற்பாடுகள் செய்தது, தில்லைக் குழந்தைகளுக்கு எண்ணெயும் பாலும் வழங்கியது, வீதியில் விளக்கும் பொற்கொடியும் அமைத்தது, நடராஜர் வீதியுலாவில் தூபம் இடுவித்தது, ஒளித் திருக்கோலம் கண்டது, தில்லையில் கல்வி பரப்பியது, தில்லை வாழந்தணர்களுக்குத் திருமடம் கட்டியது, பெருமானுக்கு யானை கொடுத்தது, மூவர் தேவாரத்தைச் செப்பேடுகளில் எழுதுவித்தது, நந்தவனம் அமைத்தது, அம்மையாருக்கு ஆயிரத்தாழி அமைத்தது, மாசிக் கடலாட மண்டபமும் வழியும் அமைத்தது, பெருமானுக்கு ஆயிரம் பசு அளித்தது, கற்றளி கண்டது, தில்லை ஏரிக்கு மதகு கண்டது முதலிய பணிகளை அந்தக் கல்வெட்டு வெண்பாக்கள் அறிவிக்கின்றன.

இந்தப் பணிகள் முதற் குலோத்துங்கன் 28-வது ஆண்டு முதல் விக்கிரமனது ஆறுவது ஆண்டுவரை சோழர் ஆட்சியிற் பணிபுரிந்த அரசியலதிகாரியாகிய நரலோக வீரனின் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இவை யாவும் தனது பக்தியின் மேலீட்டினால், தன் சொந்தப் பொருட்செலவிலும் பொறுப்பிலும் அவன் செய்தானென்று ஊகிக்கவேண்டும். இன்னும் இப்போதுள்ள தில்லைக் கோவிந்தராஜனின் சந்நிதி பெரும்பாலும் இவ்விரு சோழர்களது முயற்சியினால் ஆகியது. தவிரவும், நடராஜப் பெருமானது பிராகாரத்தையும், கோவிந்தராஜரது சந்நிதிகளின் சுற்றுப் பிராகாரத்தையும், விக்கிரம சோழன் திருமாளிகை எனவும், திருமூலட்டானேசுவரரைச் சேர வருகின்ற இரண்டாம் பிராகாரத்தைக் குலோத்துங்கன் திருமாளிகை எனவும் செய்வித்தான். இவன் தில்லைப் பெருமானைத் தனது 'குலநாயகம்' என்று கொண்டாடியதும், தனது பத்தாவது ஆண்டில் திறைப் பொருளாக வந்த யாவற்றையும், இத்திருப்




பணிக்கே செலவிட்டான் என்பதும் அவனது பக்தியின் சிறப்பை உணர்த்தும்.

விக்கிரம சோழன் மகனான இரண்டாம் குலோத்துங்கனது (கி. பி. 1133–1150) திருப்பணிகளும் அளவில்லாதன. அவன் தன் அரசமாதேவியுடன் தில்லை சென்று கிழக்கு எழுநிலைக் கோபுரத்தை அமைத்தான். தான் பிறந்த இமயத்தை நினையாதிருக்க அதனினும் மேம்பட்ட முறையினில் சிவகாமி அம்மனுக்குத் தனித் திருக்கோயில் திருச்சுற்று மாளிகைகள் அமைத்தும், கோயிலின் பல பகுதிகளுக்குப் பொன் வேய்ந்தும் திருப்பணிகள் செய்தான். தில்லை மண்டபத்தில் இருந்த கோவிந்தராஜப் பெருமாளை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தினான். இச் செய்திகளைக் குலோத்துங்க சோழன் உலாவும், பல கல்வெட்டுக்களும் அறிவிக்கின்றன.

தனக்குத் தில்லையில் முடிசூட்டும் விழாவை நடத்தியதும், தன்னை 'நடராஜனது திருவடித் தாமரையில் உறையும் வண்டு' எனத் தனது திருவாரூர்க் கல்வெட்டுக்களில் குறித்திருப்பதும் இவனது அளவற்ற பக்திக்குச் சான்றாகும்.

மூன்றும் குலோத்துங்கன் (கி.பி. 1178



சேக்கிழார்
திருநாகேச்சரம்

–1218) நாற்பதாண்டு அரசு செலுத்தினுன். திரிபுவனம் பெருங் கோயிலைக் கட்டினுன். அதனில் காணும் கல்வெட்டு ஒன்றில் தன் வெற்றிகளையும் திருப்பணிகளையும் குறித்துள்ளான். தில்லைக் கூத்தனின் கோயில் மூன்றும் பிராகாரத்தை உண்டாக்கி அதன் சுற்று மதிலையும் எடுத்தான். அவை, இப்போது ராஜாக்கள் தம்பிரான் திருவீதி திருமாளிகை என அழைக்கப் பெறுவன. தில்லைத் திருப்பணிகளில் மேம்பட்ட சோழ வம்ச அரசர்களில் இந்தக் குலோத்துங்கனே கடைசியானவன்.

இவனது சிறப்புறும் பணி, திருத்தொண்டர் புராணத்தைத் தனது அமைச்சர் குன்றத்தூர் சேக்கிழாரால் செய்வித்து, அதனைத் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் நாள்தோறும் ஓராண்டு கேட்டு இன்புற்று, சேக்கிழாருக்கு, "தொண்டர்சீர் பரவுவார்" என்ற பட்டத்தையும் சூட்டி, அவரை யானையின் மீதேற்றித் தானே அவருக்குக் கவரி வீசி வந்ததாகும். திருத் தொண்டர் புராணம் பெரிய புராணமாக விளங்குவதாயிற்று. தில்லை மூவாயிரவர் அதனை ஐந்தாவது வேதம் எனக் கொண்டாடினர்.

இவனுக்குப்பின், சோழ பரம்பரை பலவீனப்பட்டு, பாண்டியர் ஆதிக்கம் தலைப்படவே, குன்றுவதாயிற்று.

மூன்றும் இராஜராஜன் (கி. பி. 1216–1246) காலத்துக் கல்வெட்டு ஒன்று, தைப்பூச விழாவில் இறைவனுக்குப் 'பாவாடை'த் திருவமுது படைத்தலைக் குறிக்கின்றது. அவன் பின் வந்த இராஜேந்திரன் (கி. பி. 1246–1279) கல்வெட்டொன்றில் அவன் தன்னை வியாக்கிரபுர (தில்லை)க் கனக சபாபதி பாத தாமரையில் உறைபவன் என்று கூறிக்கொள்கிருன்.

இவற்றைப் போன்ற கல்வெட்டுக்கள் பெரும்பாலும் நந்தவன அமைப்பு, நுந்தா விளக்கமைத்தல், பூசை வழிபாட்டுக்குரிய நிவந்தங்கள், அறச்சாலை, அக்கிரகார அமைப்பு முதலியவற்றையும் கூறுகின்றன.

முதல் இராஜராஜன் காலம் முதற்கொண்டு, சோழர்களுடைய கல்வெட்டுக்களில் முதற் பகுதியாகக் காணப்படும் மெய்க்கீர்த்திகளின் சரித்திரக் குறிப்பு முக்கியமானது. இவை சோழர் பரம்பரையின் சரித்திரத்திற்கு இன்றியமையாத பெருந் துணையாக நிற்பன. இன்னுமொன்று, இராஜராஜன் 1 கால முதல், கோயிற் சொத்துக்கள் வாங்குவதும், கொடுப்பதும், மற்றும் எவ்விதச் சாசனங்களும் இறைவனின் பிரதிநிதியாகத் 'திருப்புலியூர்ச் சண்டேசுவர தேவனுர்' கருதப் பட்டு அவர் பெயரிலேயே நடந்துவந்தன. விக்கிரம சோழன் காலத்தில் இவ் வழக்கு, தில்லையில் விடப்பட்டதாகும். அவன் கால முதற் கொண்டு தில்லைக் கோயில் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் பொது தீட்சிதர் சபையினரின் பெயரால் ஏற்பட்டது. இவற்றிற்குப் பொதுச் சபையாரின் சட்ட திட்டங்கள் ஏற்பட்டு இன்றும் நடைமுறையில் இருக்கிற செய்தியும் இங்குக் குறிக்கற்பாலது.



### பாண்டிய அரசர் பணி

சோழ வமிச அரசர்களின்கீழ், தில்லைப் பெருமானது கோயிலின் வளர்ச்சி மேற்கூறியவாறு இருப்ப; அவர்களுக்குப் பின்னர் அரசேற்ற பாண்டியர், கி. பி. 1216–1317 வரையிலும், விஜயநகர அரசர்களால் கி. பி. 1428 முதல் ஏற்பட்ட சில திருத்தங்களையும் பார்ப்போம்.

பாண்டியர்களில் தலைசிறந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251–1271) தன் வெற்றிகள் காரணமாகத் திருச்சிற்றம்பலவனை வணங்கி, கோயிலில் துலாபாரதானமும் வழங்கினுன். இந்தக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் முப்பது இவனைப் பற்றியவையாகும். கோயில் நந்தனவனத்திற்கும், திருச்சிற்றம்பல மாகாளி கோயிலுக்கு விழாவும் பூசையும் நடைபெறுவதற்கும் திருநாமத்துக்காணி விட்டதாகவும், தில்லைத் திருக்கோயிற் பொதுவார்கள் கணக்கு வைத்திருந்த முறையில் குறைகள் சில காணப்பெற்றதால் மேற்பார்வை செய்து தணிக்கையிட்டதாகவும், மற்றும் பல இறைபணிகளைச் செய்ததாகவும் இவன் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இவன், தில்லையில் மேற்கு இராஜ கோபுரத்தை அமைத்தனன். அதற்குச் சுந்தரபாண்டியன் கோபுரம் என்பது பழைய பெயராகும். இவனுலும், இவன் வழிப் போந்தவர்களாலும் பெருமானுக்குச் செங்கழுநீர்ப் பூமாலைகள் சாத்த ஓடை, நந்தன

வனங்கள், திருவிழாப் பணிகளுக்கும் யாத்திரை வாசிகளுக்கும் வேதப் பிராமணர்களுக்கும் நிலதானங்கள் பல விடப்பட்டுள்ளன. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது மற்றொரு கல்வெட்டு, பெரும்பற்றப் புலியூருக்கு மேற்கேயுள்ள புளியங்குடி என்ற கிராமத்தை, விக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம் என்ற கிராமத்திலுள்ள நூற்றெட்டு அந்தணர்களுக்காக விட்ட செய்தியும், இன்னுமொன்று ஆடூரில் 116 வேலி நிலங்களை 108 அந்தணர்களின் பராமரிப்புக்காக விட்டதும், அவர்கள் வேலிக்கு நான்கு கல நெல்லாகத் தில்லைப்பெருமானுக்குக் கொடுக்க வேண்டு மென்ற செய்தியும், பிறவும் கூறுகின்றது. இன்னுமொன்று, அண்ணாமலை நகருக்கு அணித்தான பவித்திர மாணிக்கநல்லூர் என்ற கொற்றவன்குடியில், அழகிய திருச்சிற்றம்பலமுடையாருக்குக் கோயில் நிறுவிய செய்தியாகும்.

## விஜயநகர அரசர் பணி

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர வமிச அரசர்கள் தலைப்பட்டனர். அவர்களின் தலையாய கிருஷ்ண தேவராயன், கி. பி. 1516-இல் தனது வடநாட்டு வெற்றிச் சின்னமாக, திருச்சிற்றம்பலவனைத் தரிசித்து, கோயிலின் வடக்கு இராஜ கோபுரத்தைக் கட்டினான்.

இவன் பரம்பரையில் வந்த தஞ்சை அச்சுதப்ப நாயக்கன் கி. பி. 1566-இல் திருவேட்களம் என்ற கிராமத்தைத் தில்லைத் திருமூலட்டானேசுவரர் கோயிலுக்கு நிலதானமாக வழங்கியுள்ளான். மதுரை வீரப்ப நாயக்கன் (கி. பி. 1572–1595) திருக்கோயிலின் வெளிச்சுற்று மதிலான வீரப்ப நாயக்கன் மதிலை எடுப்பித்தான்.

## சேர அரசர் பணி

சேரமான் பெருமாள் நாயனார் வழி வந்த கொச்சி மன்னர் மகாராஜா ராமவர்மா என்பார், தம் நாட்டில் ஐந்து கிராமங்களையும் சிதம்பரம் கோயிலுக்கு முன்னரே விடப்பட்ட பல நிலங்களையும் இறையிலியாக்கித் தில்லைப் பெருமான் நிவேதனத்திற்காக விட்ட செய்தியினை அவரது கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.




## 18ஆவது 19ஆவது நூற்றாண்டினில்

பதினெட்டாவது நூற்றாண்டில், ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த போர்களில், பல தடவைகள் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், முகமதியர்களும் தில்லைக் கோயிலைத் தம் அரணாகக் கைவசப்படுத்தி வைத்திருந்தனர். அக்காலங்களில் தில்லைப் பெருமானுக்கு வழிபாடுகள் இல்லாமலும் கழிந்தன. இரண்டாம் மைசூர் யுத்தகாலத்தில் 1781-இல், தில்லைக் கூத்தப் பெருமான் தஞ்சை அரசனின் உதவியால் திருவாரூருக்குக் கொண்டு போகப்பட்டு, மறுபடியும் தில்லைக்கு எழுந்தருளினான். இது நிகழ்ந்தது கலியாண்டு 4874-சக 1695-இல் (கி. பி. 1773) என ஆயிரக்கால் மண்டபக் கல்வெட்டொன்று குறிக்கின்றது. மற்றொரு முறை தீக்ஷிதர்களால் புளியங்குடி என்ற ஊரின் கண், ஒரு புளிய மரத்தின் பொந்தில் ஆடற்பெருமான் பல ஆண்டுகள் மறைக்கப் பெற்றிருந்து, பின்னர் கொணர்விக்கப் பெற்றான் என்ற செய்தியை, சோழ மண்டல சதகச் செய்யுள் ஒன்று கூறுவது.

இவ்வாறு ஆங்கில, பிரெஞ்சுக்கார, முகம்மதியப் போர்களில் சிதைவுபெற்ற இந்தப் பெருங் கோயிலில் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் (கி. பி. 1754–1794) தமது பெரும் பொருளைக் கொண்டு திருப்பணி ஆரம்பித்தார். அவருடைய அக்கையார் சுப்பம்மாள் என்பவர் அரிய பல பணிகள் செய்துள்ளதும், முதலியார் ஆனித்திருமஞ்சன விழா, திருத்தேர் மண்டபம், திருத்தேர் திருத்தி யமைத்ததும், நாற்பதினாயிரம் வராகனுக்கு மேல் செலவிட்டதும் தெரிகின்றன. பச்சையப்பர் செய்த பெரும் பணிகளை வித்துவான் மழவை மகாலிங்கையரும், காஞ்சி மகா வித்துவான் சபாபதி முதலியாரும் பல பாக்களால் போற்றியுள்ளனர். பச்சையப்ப முதலியார் அவரது தமக்கை சுப்பம்மாள் என்னும் இருவருடைய திருவுருவங்களும் கிழக்குக் கோபுர வாயிலில் இன்றும் காணலாகும்.

இவர்களுக்குப் பின்பு தில்லைப் பெருமானுக்கு அரும்பணிகள் செய்த வள்ளல்கள், செட்டிநாட்டு அரசர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அவர்களுடைய தமையனார் சிதம்பரம் செட்டியார், திவான்பகதூர் ராமசாமி செட்டி



சிதம்பரம் கோயில் மேல்தளத் தோற்றம்
[உரிமை: புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா]




யார் அவர்களும் அவர்களுடைய முன்னோர்களுமாவர். இராஜ கோபுரங்கள் யாவும் பழுது பட்டவை இவர்களால் திருத்த முற்றன. கனகசபை பொன் முலாம் பூசப்பெற்றது. அகளங்கன் திருமாளிகையும், குலோத்துங்கன் திருமாளிகையும், அவற்றின் உள்ளடங்கிய திருவீதிகளும் செம்மையாக்கப் பெற்றன. முக்குறுணிப் பிள்ளையார்கோயில் சுற்று மண்டபத்துடன் அமைக் கப்பட்டது. சிவகங்கைக் குளத்தின் படிகள் அகலமும் செம் மையும் உற்றன. இரண்டாம் பிராகாரத்துள்ள அழகிய திருச் சுற்று மாளிகைகளும் ஆக்கப்பெற்றன. இன்னும் தில்லைப் பெரு மானுக்குப் பல நிபந்தங்களால் உபயங்களும், கட்டளைகளும், நுந்தாவிளக்கு, பரிகலங்கள், வாகனங்கள் முதலியனவும் செய் யப்பெற்றன. இவை யாவும் செய்து, 1891-இல் ஒரு குடமுழுக்கு விழாவும் (கும்பாபிஷேகம்) செய்யப்பட்டது. இம்மாதிரியாக இப் பெருங் குடும்பத்தினர் மூன்று தலைமுறையாகத் திருப்பணி செய் துள்ளனர். ராஜா ஸர் அண்ணாமலையவர்களின் தந்தையும் தாயும் சிற்சபைக் கூத்தப் பெருமான் சந்நிதியில் நுந்தா விளக்குத் தாங்கி யிருப்பதை இன்றும் காணலாகும். இவர்கள் தேவாரத் திருமுறைகளை ஓம்பு முறையில், தேவாரப் பாடசாலை நியமித் துள்ளதும் போற்றுதல் வேண்டும். இவ்வாறுகப் பன்முறை யிலும் இவர்கள் செய்த பெரும்பணியானது என்றென்றும் இவர்களது அழியாப் புகழுக்கும் இறைவன் திருவருட் பேற்றிற் கும் காரணமாகும். இதற்கு 64 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆடூர் பெருநிலக்கிழார் திரு. எம். இரத்தினசபாபதி பிள்ளை யவர்களது பெருங்கொடையாலும் நடராஜா ஜெவெல்லரி உரிமையாளர் திரு. செ. இரத்தினசாமிச் செட்டியார் முதலிய செல்வர்களின் பேருதவியாலும் 7-7-1955இல் சிற்றம்பலத் திருப்பணி நிறைவேறிக் கும்பாபிஷேகம் சிறப்புற்றது.

## கோயிலின் அமைப்பு

திருக்கோயில் ஏறக்குறைய நாற்பது ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இதன் பகுதிகள் பதின்மூன்று நூற்றாண்டுகளுக் கிடையே வெவ்வேறு அரசர்களால் கட்டப்பட்டவை. சிவ கங்கைக் குளமும், மற்றச் சுற்றுத் திருக்கோயில்களும் அக் காலச் சிற்ப முறையின் மேம்பாட்டை விளக்கும்.

இந்தக் கோயிலின் ஆதி அமைப்பு, சிற்றம்பலமும் பேரம் பலமுமாகும். இவை மரத்தால் கட்டப்பட்டிருத்தல் இன்னும் முன்போல் காண்பது இதற்குச் சான்றாகும். பல்லவர் கண்ட



கனகசபை

[அன்புரிமை : டைரெக்டர் ஆப் இன்பர்மேஷன்]




குகைக் கோயிலுக்கும் கற்கோயிலுக்கும் முந்தியன என்பது அவற்றின் பழமையை அறிவிக்கும். அக்காலத்தில், இரண்டாம் பிராகாரத்திலுள்ள திருமூலட்டானேசுவரர் கோயிலும் சிறப்புற் றிருத்தல்வேண்டும். இக்கோயிலினுள் ஐந்து சபைகள்உள்ளன.

சித் சபையே சிற்றம்பலமாகும். இதுவே நடராஜப் பெருமானும் அவரது இடப்பாகத்தில் சிவகாம சுந்தரி யம்மை யும் அமர்ந்திருக்கும் கருவறையாகும். இதனையே மணி வாசகனார், 'எழில் பெறும் இமயத் தியல்புடை யம்பொற் பொலிதரு புலியூர்ப்பொது' எனச் சிறப்பிக்கின்றார். இதன் சிகரத்தில் ஒவ்வொரு பொன் ஓட்டிலும், 'சிவாயநம' என்ற பஞ்சாட்சரத்தை எழுதி வேய்ந்திருப்பதாகத் தில்லையுலாக் கூறுகின்றது. சித் சபையில், பெருமானது வலப்புறத்தில் சிதம்பர இரகசியம், அதாவது ஆகாய இலிங்கம் மந்திர சொரூபமாய்த் திருவம்பலச் சக்கரத்துடன், அமைக்கப் பட்டுள்ளது. இதற்கு ஆண்டுக்கு ஒரு முறை புனுகுச் சட்டம் சாத்தப்படுகிறது. ஆகாய இலிங்கம் சிதம்பர இரகசியமாக திருவாசியுடன் அமைத்து அதனை ஒரு தங்க வில்வ மாலையுடன் விளங்குவதைக் காணலாம்.

சித் சபையாகிய பொன்னம்பலத்தில், இறைவன் சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் என்ற மூவகைத் தோற்றத்துடனும் எழுந்தருளியிருக்கின்றார். நடராஜத் திருமேனி சகளம்; இரகசியம் நிஷ்களம்; ஸ்படிக லிங்கம் சகள நிஷ்களமாகும். ஸ்படிக லிங்கத்தை அழகிய சிற்றம்பல முடையார் எனவும், திருவம்பல முடையார் எனவும் கூறுவர். இவர்களேயன்றி இங்கு இரத்தின சபாபதியாகிய நடராஜாவும், ஸ்வர்ண கால பைரவரும் காட்சி அளிக்கின்றனர்.

கனக சபை என்பது மேற்கண்ட சிற்றம்பலத்திற்கு எதிரேயுள்ள எதிரம்பலமாகும். இங்குப் பெருமான் தினமும், ஆறு கால பூசைகளும், ஆண்டில் நான்கு முறை திருமஞ்சன மும் கொண்டருளுகிறார். இங்கு நாள்தோறும் காலை 10 மணி யளவில், அழகிய திருச்சிற்றம்பலமுடையாரும், இரத்தினசபா பதியும் அபிஷேகம் ஆராதனை பெறுகின்றனர்.

தேவ சபை என்பது வழக்கத்தில் பேரம்பலம் எனப்படும். இங்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். அநபாயனுடைய இரண்டாம் குலோத்துங்கன், தன் குல முன்னோர் சிற்றம் பலத்தைப் பொன்மய மாக்கியதனால், தான் இப் பேரம்பலத் தைப் பொன்னிலை மெழுகிப் பொன்மயமாக்கினான் என் பதைப் பெரிய புராணம் கூறுகின்றது.




[12-ஆவது தகடு

நிருத்த மண்டபம்

அன்புரிமை : புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா]



நிருத்த சபை என்பது தேர் அம்பலமாகும்.* நடராஜப் பெருமான் திரு முன்னர், கொடி மரத்தின் தென்பால்உள்ளது; மிகவும் சித்திர வேலைப்பாடமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது; மண்டபம் யாவும் பரிகள் பூட்டிய தேர் அமைப்பைப் பெற்றது. இதன் அணி திகழ் சிறு கோயிலினுள் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி காட்சியளிக்கின்றார். சரபமூர்த்தி இத்தேர் மண்டபத்தின் தென் மேற்கில் எழுந்தருளி யுள்ளார். அதன் வடமேற்கு மூலையின் வெளிப்பக்கத்தில் ஒரு சிறிய சிற்ப உருவம், மூன்றும் குலோத்துங்கன் காலத்ததாக, அச்சோழ



அன்புரிமை : ஆனந்த விகடன்]

நிருத்த சபைத் தேர் அமைப்பு

* The oldest thing now existing here is a little shrine in the innermost enclosure, a porch of fifty-six pillars, about eight feet high and most delicately carved, ornamented with dancing figures more graceful, and more elegantly executed than any others of their class, so far as I know in South India. It is the Nrtta or Nrtya Sabha, the hall of dance.—Fergusson,—History of Indian and Eastern architecture I p. 374.

னது உருவமாக திரிபுவனம் கோயில் விமானத்தில் காட்சி யளிப்பது போன்று தோன்றுகின்றது. ஆராய்ச்சியாளர் இதனை நிர்ணயிப்பார்களாக.

இராஜ சபை என்பது ஆயிரக்கால் மண்டபமாகும். நடராஜப்பெருமான் ஆண்டில் மார்கழியிலும் ஆனியிலும் இரு முறை இங்கு எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுகிறார். ஆருத்திரா, ஆனித்திருமஞ்சன தரிசனங்கள் கொடுப்பதும் இம் மண்டபத்தில்தான். இதன் அகலம் 190 அடி, நீளம் 340 அடி. மண்டபத் தூண்கள் வரிசைக்கு இருபத்து நான்காக நாற்பத் தொரு வரிசைகள் உள்ளன. நடுவில் வௌவால் நத்தி மண்டபம் அமைக்கப் பெற்றதால் ஐம்பத்தாறு தூண்கள் குறைவென்றும், ஆதலின் மண்டபத்து வெளியிலுள்ள தூண்களையும் சேர்த்து எண்ணிக் கொள்ளுவர். சேக்கிழார் புராணச் செய்யுளாகிய, "இவ்வையிரு நூறுகால் மணிமண்டபத் தெந்தையார் திருவருளை யுன்னி...நிருத்தனார் தந்த சொல் முதலா வெடுத்தனர்" என்பது, ஈண்டுச் சேக்கிழார் பெரிய புராணத்தை அருளியதைக் குறிக் கின்றது. இது தேவாசிரிய மண்டபமுமாகும். மண்ட பத்தின் நான்கு பக்கத் தொடக்கத்திலும் அழகிய யானை உருவங்கள் கற்களிலேயே செதுக்கிப் பொருத்தப்பட்டுள்ளன. மண்டபத்தின் கீழ் வரிசைப் பத்திகள் முழுதிலும், நர்த்தன உருவங்கள், இசையாளர் உருவங்கள், சிவகாமி அம்மன் கோயிற் சிற்பங்கள் போன்று மிக வனப்புடன் செதுக்கப்பட் டுள்ளன. இத்தகைய பெருமண்டபங்கள், விஜயநகர அரசர் வருகைக்கு முன்னரே, சோழர்களால், இங்கிருப்பது போலவே திருவக்கரை, திருவாரூர், காஞ்சி ஆகிய தென்னாட்டுக் கோயில் களில் நிறுவப்பெற்றிருப்பது இங்குக் குறிப்பிடவேண்டிய தொன் றாகும். இவ்வைந்து சபைகளுக்கு அதிபராய், ஆனந்த நடனம் புரியும் தன்னியராதலின், எம்பெருமான், சபா நாயகர், சபா நாதர், சபாபதி என்றும் அழைக்கப் பெறுகிறார்.

இராஜ சபைக்கு அணித்தே, தொன்மைக் கோயிற் குள மாகிய சிவகங்கைத் தீர்த்தம் உள்ளது. இதில்தான் பல்ல வன் வெம்மை நோய் நீங்கிப் பொன்னிறம் அடைந்தான். திருக் குளத்திற்கு புதியதோர் அமைப்புச் செய்தான். குளத்தின் நீளம்



160 அடி. அகலம் 100 அடி. இதன் அழகிய திருச்சுற்று மாளிகையையும், படிகளையும் எடுப்பித்தவன் பொன்னம்பலக் கூத்தன் எனவும், நரலோக வீரன் எனவும் அழைக்கப்பெறும் தொண்டை நாட்டு மணவிற் கூத்தனாகிய காலிங்கராயன் (கி. பி. 1118—1150) ஆவன்.

நரலோக வீரன் சிறந்த சிவ பக்தன்; முதற் குலோத்துங் கனது படைத் தலைவன். பல போர்களில் வெற்றிபெற்றுக் காலிங்கராயன் எனப் பட்டம் பெற்றவன். தில்லைக் கூத்த னிடம் பேரன்பு பூண்டவன். இவனது கல்வெட்டுக்கள் முதற் குலோத்துங்கனது 28 ஆவது ஆண்டு முதல் அவன் மகன் விக்கிரமன் 6 ஆவது ஆண்டுவரை தில்லையிலும் திருவதிகையிலும் அவன் செய்துள்ள திருப்பணிகளை விளக் குவன. அவை இத்திருக்குளமும், நூற்றுக்கால் மண்டபமும், சிவகாமி அம்மனது தனிக்கோயிலின் திருச்சுற்று மதில்களும், மண்டபங்களும், பிராகாரமும் இன்னும் மிகப் பலவுமாகும்.

சிவகாமி அம்மனது தனிக்கோயில் கட்டியவன் அநபாய சோழனான குலோத்துங்கன் II என ராஜராஜசோழன் உலா வும், தக்கயாகப் பரணியும், குலோத்துங்க சோழன் உலாவும் கூறுகின்றன. அம்பிகையின் முன்புற மகா மண்டபம் பெரு மிதத் தோற்றமுள்ளது. இரட்டைத் தூண்கள் அழகுற அமைந் துள்ளன. அதன்கண் தூணுடன்செதுக்கிய கல்லாலாய சங்கிலித் தொடரையும் காணலாம். திருச்சுற்று மாளிகைக் கீழ் வரிசை முழுவதும் நாட்டியமாடுபவரும், வாத்தியக்காரர்களும் சிற்ப மாகத் திகழ்கின்றனர். இவை யாவும் ஒரு பெருமிதக் காட்சி யாகும். இவை உப்புசச் சிற்பங்களுக்கு (Bas-relief) ஒரு அணியாகத் திகழ்வன.

இக் கோயிலின் நான்கு திசையிலும், நான்கு இராஜ கோபுரங்கள் உள. அவற்றை அடுத்து நான்கு மொட்டைக் கோபுரங்களுமுள. இவை காலப் போக்கில், பல அரசர்களால் கட்டப் பெற்றவை. ராஜகோபுர வாயில்களில் உள்ள நிலைத் தூண்கள் மூன்றடிச் சதுரமும், முப்பதடி உயரமும் உள்ள ஒரே கல்லால் ஆனவை. அவைகளின்மேல் நிலைப் பத்திவரை கருங்கல்லாலும், அதன் மேற்பகுதி செங்கல்லாலும் சுதையா

லும் ஆனவை. கோபுரங்களின் கீழ்நிலை மாடங்களிலும் மேல் நிலைப் பத்திகளிலும் இறைவன் அருள் திருக் கோலங்கள் பல, கண்டவர் மனத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. ஆராய்ச்சியாளர், பொதுவாக உயர்ந்த கோபுரங்கள் விஜயநகர அரசர்களும், சிறப்பாகக் கிருஷ்ணதேவ ராயரும் செய்தவை என்பர். ஆனால் தஞ்சைப் பெருவுடையார் கோபுரங்கள் 10-ஆம் நூற்றாண்டில் ஆனவை. விமானம் ஆகாய மளாவவும் கோபுரங்கள் தாழ்ந்திருக்கவும் காண்கிறோம். இத்தகைய பல கோபுரங்கள் விக்கிரமசோழன் (கி. பி. 1118-1136) காலத்திலேயே ஏற்பட்டிருப்பதைச் சோழநாட்டில் காணலாம்.

தில்லைக்கோயிலின் கிழக்குக் கோபுரம், எழுநிலை மாடமாக இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1138-1150) ஆரம்பித்ததாகக் குலோத்துங்க சோழன் உலா கூறுகின்றது. இவனே, இன்னும் வடக்குக் கோபுரத்தையும் ஆரம்பித்திருக்க வேண்டுமென்பதும் தெரிகின்றது.

இவ்வாறாக, இரண்டாம் குலோத்துங்கனால் (கி. பி. 1133-1150) ஆரம்பித்து முடிக்கப் பெற்ற கிழக்குக் கோபுரம் காடவர்கோன் (கி. பி. 1243—1279) இரண்டாம் கோப் பெருஞ்சிங்கனால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் திருத்தி அமைக் கப்பெற்றும், சமீபத்தில் பச்சையப்ப முதலியாராலும் (கி. பி. 1754—1794) அவரது தமக்கை சுப்பம்மாளாலும் சீர்பெற்றும் துலங்குகிறது.

இந்தக் கோபுரத்தின் சிறப்பானது, அந்த நிலைகளில் அடுக்கடுக்காகப் பரத சாத்திரத்தில் விவரித்திருக்கும் நூற்றெட்டு நாட்டிய பேதச் சிற்பங்களைச் செதுக்கியிருப்ப தாகும். இதன் பகுதி மேற்குக் கோபுரத்திலும் காணலாம். இவ்விரண்டு கோபுர வாயில்களிலும் காணும் சிற்பங்களில் ஒவ்வொன்றிற்கும் மேல் அதன் அதன் விவரம் பரத நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடியே கல்லில் செதுக்கப் பெற்றுள்ளன. இவை தவிர, இக்கோபுரத்தில் மேல் கீழ் நிலை களிலும், நாற்புறமும், வெளித்தோற்றத்திலும் திகழும் அற்புதச் சிற்பங்கள் பல; கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர், கஜமுக சம்ஹாரர், அர்த்தநாரீசுரர், ஊர்த்துவ தாண்டவர், பதஞ்சலி,





பரதநாட்டியச் சிற்பங்கள், கிழக்கு கோபுர வாயில்

அன்புரிமை : புதை பொருள் ஆராய்ச்சியினர்] [12-வது நூற்றாண்டு

வியாக்கிரபாதர், இந்திரர், நாரதர், திருமூலர், அகத்தியர் முதலியவர்களுடைய உருவங்களாகும்.

மேற்கு ராஜ கோபுரம், பாண்டியன் முதல் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுல் (கி. பி. 1251) கட்டப்பெற்றதெனப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. பரதநாட்டிய பேதங்களை அறிவிக்கும் குறிப்புக்களோடு தோன்றும் நாட்டியச் சிற்பங்களுடன் கோபுர வெளி நிலைகளிலுள்ள சூரியன், இடபாருடர், பசுபதி, கீழ்ப்புறத்தில் தாரக சம்ஹாரப் போர்க்கோலத்துடன் உள்ள சுப்பிரமணியர் தனிக் கோயிலும், மேற்கு நோக்கித் தனிக் கோயிலாகத் தோன்றும் கற்பக விநாயகர் என்னும் க்ஷேத்திர பாலப் பிள்ளையாரது நர்த்தன விநாயகர் தோற்றமும் யாவும் சிற்பக்கலை மேம்பாடுடையன.

வடக்கு ராஜ கோபுரம் விஜயநகர வமிசப் பேரரசனுன கிருஷ்ணதேவராயனுல், ஒரிஸ்ஸா வெற்றியின் நினைவாகத் தில்லைச் சிற்றம்பலவனைத் தரிசித்துக் கி. பி. 1516-ல் கட்டப்பட்டதென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இதன் உயரம் 140 அடியாகும். இக்கோபுர வாயில் நிலைப் புரை யொன்றில் கிருஷ்ணதேவராயனின் உருவச் சிலையைக் காணலாம். இங்கும் பரதநாட்டியப் பெருமையினை அதன் வாயில் நிலைகளிற் காணும் சிற்பங்கள் விளக்குகின்றன.

தெற்குக் கோபுரம், சொக்கச் சீயன் எழுநிலைக் கோபுரம் என்ற பெயருடையது. கி. பி. 1237-ல் கட்டத் தொடங்கி, கி. பி. 1240-ல் முடிவுற்றதெனத் தெரிகின்றது. இதனைக் கட்டியவன் சொக்கச் சீயன் என்ற முதற் கோப்பெருஞ் சிங்கனுவான் (கி. பி. 1282–1243.). இதில் காணப்படும் இரு கயல் உருவங்களைப் பார்த்தோர், இது சுந்தரபாண்டியன் கட்டியது என்பர். இது பொருந்தாது. கோப்பெருஞ் சிங்கன் இதனைக் கட்டியபோது பாண்டியருக்கு அடங்கிய குறுநில மன்னன் ஆயினன் என்பதையே இது உணர்த்தும். இக்கோபுர வெளி நிலைகளிற் காணும் அர்த்த நாரீசுவரர், திரிபுராந்தகர், மஹிஷாசுர மர்த்தனி, பிக்ஷாடனர் முதலிய பல திருவுருவங்கள் மிகவும் கண்கவர்வன.



பாண்டிய நாயகம் கோயில், கோயிலின் மூன்றும் பிராகாரமாகிய 'ராசாக்கள் தம்பிரான் திருமாளிகைத் திருவீதி' யில், வடக்குக் கோபுரத்துக்கு அணித்தாக வடமேற்கு மூலையில் உள்ளது. மாறவர்மன் சுந்தரபாண்டியனுல் (கி. பி. 1216–1251) தேர்போன்று உருளைகள் மாட்டி யானைகளைப் பூட்டி இழுப்பது போன்று செய்யப்பட்ட அரியதொரு பெரு மண்டபம் இது. இதன் மேற்குப்புறத்தே, உயர்ந்த மற்றொரு மேடையின் மீது ஆறுமுகப்பெருமான் மயிலின்மீது அமர்ந்து வள்ளி தேவசேனையுடன் காட்சியளிக்கின்றுர். தெய்வத் திருமேனிகள் மிக வேலைப்பாடமைந்தவை; அழகியவை. மண்டபத்தின் உட்புறமெங்கும், சமீபத்தில், மெய்யன்பர் திரு. செ. இரத்தினசாமி செட்டியார் அவர்கள் பொருளுதவியால் கந்தபுராணம், திருமுருகாற்றுப்படையில் கூறிய ஆறுபடை வீடுகளின் காட்சிகள் நேரிற் காண்பன போல் அழகிய வர்ணம் தீட்டிய ஓவியங்களாக அமைக்கப் பெற்றுத் திகழ்கின்றன.

நவலிங்கம் கோயில், சிவகங்கையின் வடக்கே திகழும் சமீப காலத்துக் கோயிலமைப்பாகும். இதனைச் சைவ நாயன்மார்களுள் ஒன்பது தொகை அடியார்களை ஒன்பது சிவலிங்க வடிவங்களாகத் தாபித்து வணங்கும் தலம் என்பர். இதற்குத் திருத் தொண்டத் தொகையீச்சரம் என்ற பெயரும் உண்டு. இதனுள்நவக்கிரகப் பிரதிஷ்டையும் உள்ளது.

தில்லைக் கோவிந்தராஜர் கோயில், எட்டாவது நூற்றுண்டில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை நிறுவிய இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனுல் (கி.பி. 717–782) தில்லைப் பொன்னம்பலத்தின் தென்புறம் ஒரு மேடையில் நிறுவப் பெற்றதாகும். இதனை ஆழ்வார் திருமங்கை மன்னன், "பைம் பொன்னும் முத்தும் மணியுங் கொணர்ந்து படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த, செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத் திருச் சித்திர கூடம்" என்கிருர். மணிவாசகப் பெருமான் பெருமாளுடைய சயனத் திருக்கோலத்தைத் திருக்கோவையாரில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 12-ஆம் நூற்றுண்டில் அநபாயச் சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133–1150) சிற்றம்பலத்தைப் பெருக்கி

யமைக்கும் பொருட்டுத் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாளை அப்புறப்படுத்தியதற்குப் பல சான்றுகள் உள்ளன. மறுபடியும், கோவிந்தராஜர் தில்லையில் அவரது பழமைத்தானத்தில் கி. பி. 1539-ல், கிருஷ்ணதேவராயரது தம்பியான அச்சுதராயரது ஆளுகையில் பிரதிட்டிக்கப் பெற்றதும், அவருடைய வழிபாடுகள் வைகானச முறைப்படி அர்ச்சகர்களால் செய்துவர நிவந்தங்கள் விடப்பெற்றதுமாகிய செய்திகள் பல கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றன.


திருச் சித்திரக்கூடத்தின் பல பாகங்களைக் கட்டிய செய்தியும், கி. பி. 1643-ல், வேலூரிலிருந்து அரசு செலுத்திய விஜய நகர வமிச ஸ்ரீரங்கராயர், இக்கோயிலை முக மண்டபத்துடனும் புதிதாகவே வனைந்த செய்தியும், இங்குள்ள வைணவர்களுக்காக ஐந்து கிராமங்களை இறையிலியாக விட்ட செய்தியும், செஞ்சியில் அரசுரிமை தாங்கிய கிருஷ்ணப்ப நாயக்கர் வைணவருக்கும் சைவருக்கும் இங்கு நடந்த விவாதங்களைத் தீர்த்து வைத்ததும், ஆங்கில அரசாட்சி வந்ததும், இன்னும் பல விவாதங்கள் வரவே அவை நீதித் தலங்களில் விவாதிக்கப்பெற்றதும், இறுதியாக 1934-ல் செட்டிநாட்டரசர் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமது பொருட்செலவில் திருச் சித்திரக்கூடத்தின் பல பகுதிகளைச் சீர்திருத்தி அமைத்ததும், அதன் முன்னணியாகும் நாற்பது கால் மண்டபத்தை அமைத்தும், வைணவ சைவ விவாதங்களை முழுதும் சமரசப்படுத்தியதும் இங்கே குறிப்பிட வேண்டியவையாகும்.

இவ்வாறாகிய தில்லைச் சிற்றம்பலவன் "கோயில்" பூலோக கைலாயம் என்பது மிகப் பொருந்தும். ஆண்டவன் தில்லைக் கூத்தனை எக்காலமும் இவ் வையகத்தையும் வானகத்தையும் இயக்க,

> தோற்றந் துடியதனில் தோயும் திதி யமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
> ஊன்று மலர்ப் பதத்தே உற்றதிரோதமுத்தி
> நான்ற மலர்ப் பதத்தே நாடு —"உண்மை விளக்கம்."—36

என இங்கு ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகிறான். சைவ உலகம் இதனையே அப்பர் சுவாமிகள் காலமுதல் "கோயில்" எனச் சிறப்புறக் கொண்டாடுகிறது.





ஸ்ரீபாசுபதேசுவரர் கோயில், திருவேட்களம் [5-ஆவது பக்கம் பார்க்க

அன்புரிமை: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

இன்னும், ஆதியில், பதஞ்சலி, வியாக்கிரபாதர்; ஜெய்மினி, மாத்யந்தனர், உபமன்யு முனிவர்களும், கோச்செங்கட் சோழர், திருநாளைப்போவார், திருநீலகண்டர், கணம்புல்லர், கூற்றுவ நாயனுர், திருமூலர், சமயாசாரியர்: அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள் நாயனுர், உமாபதி சிவாசாரியர், குருஞான சம்பந்தர், அருணகிரியார், அப்பைய தீக்ஷிதர், இராமலிங்க அடிகள் முதலிய யாவரும் தரிசித்து உளங்கனிந்து பாடிப் பேரருள் பெற்றதும் இத்தலமே. இங்கு எல்லோரும் சென்று, 'செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பல மேய செல்வன் கழலேத்தும் செல்வமாய' பேரின்பத்தைப் பெற்றுத் திளைப்பாராக.

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகலப்,
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடைமட வாள் உமை
கோன்அடி யோமுக் கருள்புரிந்து,
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயண ஞெடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனர்-திருப்பல்லாண்டு

தில்லைச் சிற்றம்பலவனைப் பற்றிய நூல்களாவன; இவையும் இன்னும் பல்வுமாகும்.

" அம்பல வாணன் அடியிணை தொழுவார்க்கு
இன்பமும் வீடும் எளிதினில் வருமே "

—வைராக்கிய சதகவுரைக் காப்பு

| | | |
|---|---|---|
| அம்பலக்கூத்தர் | | " கைச்சீட்டு " |
| திருமூலர் | கி. பி. 5 நூ | திருமந்திரம்—திருவம்பலச் சக்கரம் — திருக்கூத்து தரிசனம் |
| திருநாவுக்கரசர் | vii நூ | 83 பாடல்கள் |
| திருஞான சம்பந்தர் | vii நூ | 22 பாடல்கள் |
| ஐயடிகள் காடவர் கோன் | 670-685, கி. பி. பரமேஸ்வர வர்மன் I | தனிப்பாடல்கள் |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள்<br>மகோதை—கார் கொண்ட வள்ளல் சேரமான் பெருமாள் | 685-720 | 10 பாடல்கள்<br>பொன்வண்ணத் தந்தாதி |
| மாணிக்க வாசகர் | 790-830 வரகுண பாண்டியன் I | திருவாசகம் திருக்கோவையார் |
| பட்டினத்தார் | கி. பி. IX நூ. | கோயில் நான் மணிமாலை |
| சிவஞான கண்டராதித்தர் | 949-957 | திருவிசைப்பா 10 |
| காவிரிப்பூம்பட்டினம் சேந்தனுர் | 985 | திருப்பல்லாண்டு 13 |
| திருவாவடுதுறைத் திருமாளிகைத் தேவர் | | திருவிசைப்பாப் பதிகம் |
| புருஷோத்தம நம்பி | 985-1010 | திருவிசைப்பா 22 |
| திருமயிலைத் திருவாலியமுதனுர்— | | ,, 42 |
| வேணாட்டடிகள் | | ,, 10 |
| பூந்துருத்தி நம்பி காட நம்பி | | ,, 11 |
| கருவூர்த்தேவர் | 985-1044 | ,, 11 |
| சேதிராயர் | | ,, 10 |
| கல்லாடர் | XI நூ. | தனிப்பாடல்கள் |
| நம்பியாண்டார் நம்பி | 985-1016 இராசராசன் I | கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம், திருத்தொண்டர் அந்தாதி, 11ஆவது திருமுறையில் 10 பிரபந்தங்கள் |

| | | | |
|---|---|---|---|
| குன்றத்தூர்ச் சேக்கிழார் | 1178-1216 | குலோத்துங்கன் III | திருத்தொண்டர் புராணம் 4286 பாக்கள் |
| உமாபதிசிவாசாரியார் | 1290-1340 | | கோயிற் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், கொடிக்கவி சிவப்பிரகாசம் முதலியன |
| இரட்டையர் | 1340-1360 | | தில்லைக்கலம்பகம் |
| அருணகிரிநாதர் | 1406-1465 | பிரபுட தேவமாராயன் | சிதம்பரம்—திருப்புகழ் 65 பாக்கள் |
| காளமேகப் புலவர் | 1455-1468 | திருமலை ராயன் | 7 பாக்கள் |
| குருஞான சம்பந்தர் | 1580 | | சிவபோக சாரம்—சொக்கநாத வெண்பா முத்தி நிச்சயம் |
| புராணத் திருமலை நாதர் | 1473-1506 | | சிதம்பர புராணம் |
| கும்பகோணம் சித்தர் சிவப்பிரகாசர் | XVI நூ | | அத்துவித வெண்பா |
| ஸ்ரீகாளத்தி கண்கட்டி மறைஞானர் (குகைமடம்) | 1520-1560 | | சிவதருமோத்தரம் சைவ சமயநெறி |
| அப்பைய தீக்ஷிதர் | 1553-1626 | ராமராயர், திருமலை நாயக்கர் | 103 சமஸ்கிருத நூல்கள் |
| வெள்ளியம்பல வாணர் | 1680-1710 | | மிருகேந்திர ராகமம் முத்திநிக்ஷ்ய பாஷ்யம் ஞானாபரண விளக்கம் |
| படிக்காசுத் தம்பிரான் | 1686-1723 | | தனிப்பாடல்கள் |
| தொண்டைநாட்டுச் சொக்கநாதப் புலவர் | ,, | | நடராஜனைப்பற்றிய தனிப்பாடல்கள் |
| ஸ்ரீகாழி முத்துத்தாண்டவர் | | | கீர்த்தனங்கள் |
| யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர் | xvii நூ. | | சித்தியார் உரைகள் |
| குமரகுருபர சுவாமிகள் | xvii நூ. | திருமலைநாயக்கர் | 1. சிதம்பரமும்மணிக் கோவை 2. சிதம்பரச் செய்யுட் கோவை 3. சிவகாமியம்மை இரட்டை மணிமாலை |
| கடம்பன் குடி பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் | XVIII நூ. | | தனிப்பாடல்கள் |
| தில்லை விடங்கன் மாரிமுத்தாப் புலவர் | | | புலியூர் வெண்பா, புலியூர் நொண்டி நாடகம், சிதம்பரேசுவரர் விறலி விடுதூது. |
| தாயுமானவர் | -1742 | விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர் | பாடல்கள் |
| நரிமணம் கோபாலகிருஷ்ண பாரதி | | | நந்தனர் கீர்த்தனை சிதம்பர கும்மி |
| திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை | | | திருத்தில்லை யமக அந்தாதி |
| நல்லூர் ஆறுமுக நாவலர் | 1823-1879 | | சிதம்பர மான்மியம் |
| வடலூர் இராமலிங்க சுவாமிகள் | 1823-1874 | | திருவருட்பா பாடல்கள் |

## வழிபாட்டிற்குரிய புகழ்ப்பாக்கள்

"தன்னோங்கு மலரடியும் தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்கு நடமாடு மன்னோங்கு மதிற்குடபால்
பொன்னோங்கல் முன்னோங்கும் பொற்பமர் கற்பகம் போற்றி"

—கோயிற் புராணம் —உமாபதிசிவம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

—பெரியபுராணம்.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லிக் கொய்யாமோ.

—திருவாசகம்.

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப் பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர் பொன் தாள்தொழ

—பெரியபுராணம்.

உண்மையறி வானந்த உருவாகி எவ்வுயிர்க்கும்
உயிராய் நீரின்
தண்மை அனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா
சரங்கள் ஈன்ற
பெண்மை உரு வாகிய தன் ஆனந்தக்கொடி மகிழ்ச்சி
பெருக யார்க்கும்
அண்மையதாய் அம்பலத்துள் ஆடியருள் பேரொளியை
அகத்துள் வைப்பாம்.

—பரஞ்சோதியார்-திருவிளையாடற் புராணம்

மாற்றறி யாத செழும் பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவர் உள்ளக்
கோயில் இருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லார் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதஎன் சாற்றும் களித்தாய்
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

—திருவருட்பா.

TAMIL NADU ARCHIVES ... MADRAS
112895

உ

தந்தி: "ஜுவெல்லரி" போன்: 22

# ஸ்ரீ நடராஜா விலாஸ் ஜுவெல்லரி ஹால்

Prop. செ. ரெத்தினசாமி செட்டியார்

தபால் பெட்டி – 14. சிதம்பரம்



S. R. சில் உத்திரவாதம்

Printed at Commercial Printing & Publishing House, Madras-1.